பள்ளிக் கல்வி – அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2022 அன்றுள்ளவாறு முதுகலை பட்டதாரி ஆசிரியர் : மாணவர் விகிதத்தின்படி கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு ஆணையரின் பொதுத் தொகுப்பில் உள்ள ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது – அப்பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அப்பணியிடங்களை IFHRMS–இல் பதிவேற்றம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை

அரசாணை (நிலை) எண். 91

நாள் 12.05.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், சித்திரை 29

படிக்கப்பட்டவை :–

பள்ளிக் கல்வி ஆணையரின் ந.க.எண். 46429/டபிள்யு2/இ3/2022,
நாள். 28.02.2023.

***********

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில், 01.08.2022 அன்றைய நிலவரப்படி அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிகையின் அடிப்படையில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர் நிலை–1 பணியாளர் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதில், 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் மேற்படி பணியாளர் நிர்ணய கணக்கீட்டின்படி (11–12 ஆம் வகுப்புக்கு 1:60 என்ற விகிதாச்சாரப்படி) கூடுதல் பணியிடங்கள் தேவை உள்ள பள்ளிகள் அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. அவ்வாறு கண்டறியப்பட்டுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் பொருட்டு, தற்போது முதுகலை பட்டதாரி ஆசிரியர் நிலையில் ஆணையரின் பொதுத் தொகுப்பில் இருந்து 254 ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை (01.08.2022 நிலவரப்படி உபரி பணியிடங்கள் ஆணையரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டவை) முன்னுரிமை அடிப்படையில் 24 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும், அவ்வாறு கூடுதல் பணியிடங்கள் தேவையுள்ள பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட 254 பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதர படிகள் ஆகியவற்றினை நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்க ஏதுவாக, ஆசிரியரின்றி உபரியாக ஆணையரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்ட பள்ளியின் DDO Code–இல் இருந்து கூடுதல் பணியிடம் அனுமதிக்கப்பட்ட பள்ளியின் DDO Code–க்கு IFHRMS–இல் பதிவேற்றம் செய்து உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமாக ஆய்வு செய்து அதனை ஏற்று, அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2022 அன்றுள்ளவாறு முதுகலை பட்டதாரி ஆசிரியர் : மாணவர் விகிதத்தின்படி ஆணையரின் பொதுத் தொகுப்பில் இருந்து (01.08.2022 நிலவரப்படி உபரி பணியிடங்கள் ஆணையரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டவை)முன்னுரிமை அடிப்படையில் 24 மாவட்டங்களில் உள்ள இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் கலம் 11–இல் உள்ள கூடுதல் பணியிடம்

தேவையுள்ள பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 249 ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதர படிகள் ஆகியவற்றினை நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்கும் வகையில் அப்பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட இவ்வாணையில் கலம் 11 இல் உள்ள பள்ளிகளின் DDO Code விவரங்கள் IFHRMS இல் பதிவேற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.16271/மை.ம.ஆ.பி/2023, நாள் 11.05.2023 மற்றும் PSL.No.202305PSL0079 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை– 6.
சம்பள கணக்கு அலுவலர்,
(தெற்கு/வடக்கு/கிழக்கு) சென்னை–35/79/05.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை – 15.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக்கணக்காயர், சென்னை – 18 .
மாநிலக்கணக்காயர், சென்னை – 35 .

நகல்
நிதி (கல்வி II/ மை.ம.ஆ.பி/ஊ.பி)த் துறை, சென்னை – 09.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
12.5.2023

ந.க.எண்.046429/டபிள்யு2/இ3/2022 நாள்: 17-05-2023

அரசாணை நகல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

Joint Director (Higher Secondary)
Commissionrate of School Education
Chennai - 600 006.
17/5/23

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

17/5/23
17/5